ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கெருடப்பத்து.

கஜேந்திரமோட்சக் கீர்த்தனை.

சென்னை-சூளை

தி. இராகவலுநாயுடு அவர்களால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

கெருடப்பத்து.

ஓம்-பூரணமேபதினறு திங்கட்சேறும்
பொருந்தியேயருக்கன்பதி னெட்டுஞ்சேருங்
காரணனேகருமுகில்போல் மேனிசேருங்
கருணைபெரும் அஷ்டாட்சரங் கலந்துவாழும்
வாரணனேலட்சுமியோ டெட்டுஞ்சேரும்
மதிமுகம்போல் நின்றிலங்குமாயாநேயா
ஆரணனேரகுராமா கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே, 1

மந்திரமே அஷ்டசித்து மெட்டுஞ்சேரும்
வாழ்கிரகமொன்பதுமே வந்துசேரும்
கந்திருவர்கணநாதர் ராசிவர்க்கம்
கலைக்கியான நால்வேதங்கலந்துவாழும்
நந்திமுதல்தேவர்களுங் கவனயோகம்
· நமஸ்கரித்துபாதமே நாளும்போற்ற
அந்தரமாய்நிறைந்திருக்குங் கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்யவாயே. 2

மூலமுதலோரெழுத்து நீர்தானுகும்
மூன்றெழுத்துமைந்தெழுத்து மொழியலாமோ
சீலமுதல்-ஓம் அங்-உங்-மங்-டுங்கொன்றே
சிவனுடையதிருநாமம் நீர்தானுகும்
காலமுதல் உங்-அங்-உங்-மங்-திங்கென்றே
கருணைபெருமிவ்வெழுத்து நீர்தானுகும்
ஆளவிஷங்கையேந்துங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள் செய்வாயே. 3

ஐயென்றுங்கிலியென்றும் ஓம்சிவாயமென்றும்
நமநமசிவசிவ ராமாவென்றும்
நமவென்றும் ஓங்காரரீங்காரமாகித்
தவமுடைய இவ்வெழுத்தும்நீர் தானாகும்
ஓமென்றுநமோநமோ நாராயணாவென்று
உன்பாதமுச்சரித் துகந்துபோற்ற
அவ்வென்றுரகுராமா கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 4
உதிக்கின்றசிவசொரூப முனக்கேயாகும்
ஓம். அவ்வும்-உவ்வுங்-கிலியுமென்றே
பதிக்கிசைந்தஐந்தெழுத்தை வெளியில்விட்டே
பச்சைமுகிலமேனியனே பணிந்தேனுன்னை
விதிக்கிசைந்தமெய்ப்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல்மெய்த்தவமேவிரும்பித்தாதா
அதற்கிசைந்தநடம்புரியும் கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 5
வேதமுதலாயிருந்த சிங்கரூபம்
விளக்குகின்றவிரணியனை வதையேசெய்தாய்
பூதமுதலாய்ப்பிறவியும புண்ணியனேயா
புகழ்ந்தவர்க்குத் துணைவருவாயசோதைபுத்ரா
நாதமுதல்விந்துவா யுயிருக்கெல்லாம்
நயம்பெறவேநிறைந்திருக்கும் வாதபிர்ம்ம
யாதவன்போல்நிறைந்திருக்கும் கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாரே. 6

முக்கோணநாற்கோண மொழிந்தைங்கோண
முச்சுடரேயறுகோண மென்கோணமாகும்
சட்கோணநாற்பத்து மூன்றுகோணமாகும
தந் திரமுஞ்சிதம்பரமுஞ் சகலசித்தும்
இக்கோணமிதுமுதலாய் வகாரமட்டும்
இறைவனைத்தானிருந்து ரட்சித்தாளும்
அக்கோணமீதிருந்து கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 7
பச்சைமுகில்மேனியனே யுனக்கேயிந்தப்
பார்தனிலே பத்தவதாரமுண்டு
மச்சமென்றும்கூர்மமென்று வராகமென்றும்
வாமனென்றும்ராமனென்றும் பவுத்தனென்றும்
துஷ்டரையடக்க மோகினிவேடங்கொண்டாய்
தோன்றியுன்சொரூபமெல்லா மறிவாருண்டோ
அச்சந்தீர்ந்தெனையாளக் கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 8
வேதியனாய்த்தோன்றிவந்தாய் மாபெலிக்கு
விண்ணவர்க்காய் நரசிங்கரூபமானாய்
சாதியிலேயாதவனாய்க் கிருஷ்ணனாகத்
தானுதித்துவந்திருந்தாய் தரணிவாழ்க
சோதனைகள்பார்த்திடுவோர் துதிப்போர்தம்மை
துஷ்டரையும்வதைசெய்து லோகமாள்வாய்
ஆதிமுதலோரெழுத்தே கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 9

மாயவனேரகுராமா அருகேவாவா
வஞ்சனைகள்ப்டர்ந்தோட நெஞ்சில்வாவா
காயாம்பூநிறமுடனே கன்வில்வாவா
கருமுகில்மேனியனே யென்கருத்தில்வாவா
நாயகனேயென்னுவி லிருக்கவாவா
நாடோறுமுன்பாதந் துதிக்கவாவா
ஆயர்குலத்துதித்தவனே கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 10

முப்புரத்தையெரித்தவனே யிப்போவாவா
முகில்நிறனேஜகநாதா முன்னேவாவா
எப்பொழுதுந்துதிப்பவர்கள் பங்கில்வாவா
ஏழைபங்கிலிருப்பவனே யிறங்கிவாவா
ஒப்பில்லாமணிவிளக்கே யொளிபோல்வாவா
ஓம்நமோநாராயணா வுகந்துவாவா
அப்பனேரகுராமா கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 11

துளபமணிமார்பழகா சுகத்தைத்தாதா
சுருதியேமெய்ப்பொருளே வரத்தைத்தாதா
களபகஸ்தூரியனே கடாட்சந்தாதா
கஞ்சனைமுன்வென்றவனனே கருணைதாதா
பழம்பொருளேசிவஜோதி பாக்யந்தாதா
பத்திமுத்திசெய்யவுன் பாதந்தாதா
அளவிடாமெய்ப்பொருளே கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 12

கெருடப்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

கஜேந்திர மோக்ஷக் கீர்த்தனை.

இ-ப்-சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

மூலமென்றழைத்த யானையைக்காத்தருள்
முகுந்தனைப்பணி நெஞ்சே.

அநுபல்லவி.

சீலமேடம் பத்மாசனன் வணங்கும்
திருவரங்கத்தரவணைமிசை யுறங்கும்
நீலமேனியனேநிறைபரஞ் சோதி
நித்தியநிர்மலநிராமய ஆதி (மூல)

சரணங்கள்.

மழையெனமும்மதம் பொழியும்விகடதட
மத்தகஜங்கள் கோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொடர்ந்து
வரவனத்தினில் நடந்தோடி
எழுகடலாமென அலைகள்பொன்மணிகொழித்
தெறியும்மடுவைத் தேடி-வண்
டிரைக்கக்குலம்விண்டுசுரக்குஞ் செந்தே
னிறைந்தினித்ததண்புனல் நாடி
அழகோடிறங்கியதில்முழுகியே பைய
அலைப்பத்தணியப்பலஜலக்கிரீடை செய்ய
முதலைபிடித்தளகதறியே யுய்ய (மூல)

காலனைப்போலுக்க மானகராவினைக்
கண்டதனை டோடி-வெகு
காலமணுவளவும் வெறுப்புச் சலிப்பில்லாமல்
கடுமையோ டோடி
ஸ்தூலசிகரமேரு விருகாலுஞ்
சுப்பல்போல் வாடிக்- காலது
துவண்டுபராக்கிரமங் குறைந்துநடுங்கிவிழி
சொருகிக்களை மூடி
ஞாலமேலிழைத்த தீவினைப்பழுது
நமக்கென்று தரைமிசைத் துதிக்கைவைத்தழுது
ஓலமிட்டண்ட சராசரமுழுதும்
உடையவனெவனதன் கதியென்றுதொழுது(மூல)
அடித்துச்செவியில்வந்து நுழைய-அபய
மென்னும் அந்தக்குரலைக் கேட்டு-பால்
அலைதவழாழியிற் பெரிய பிராட்டியோ
டாடியவிளை யாட்டு
விடுத்துகெருடன்மே லேறியாயிரம்படம்
விரித்தெழுமணிச் சூட்டுச்-சேஷ
மெத்தைதுறந்து திரு மார்பிற்பளபளென
விளங்கிய எருல் காட்டி
வடத்தணிகவுஸ்துவ மசையப்பொன்னுடை
வங்யகப்பசுந்துளபப் பரிமளவாடை
எடுத்திடவுருவஞ் செந் தாமரையோடை
எனச்சிறந்திட ஷணத் தொழிந்திடப்பீடை(மூல)

மிக்கச்சூரியனுந்தன் ஞெளிமழுங்கிப்பிர
மித்துக்கண்கள் கூச-முடி
மீதுகவித்தநவ ரத்னநெடுமகுடம்
விண்ணிடை வெளியில்வீச
ஏறிமணிப்பிரபை திகழ்வாகுவலயமேகத்
திந்திரனுமிசை யேகக்கையில்
ஏந்தியபாஞ்ச சந்நியஞ்சக்ராயுத
மிலங்கிடக் கைலாச
வரையுறைசிவன்முத லோரிதுவென்ன
மாயமோவென்றிறைஞ்சி துதிகள்பண்ண
திருமுகம்வேர்த்துளங் குறுநகைதுன்னச்
சித்தமிரங்கிக்கிர்பை பெருகியேமின்ன(மூல)
காதிற்குண்டல் ஜோதியினிலிருள்
பாதலத்தகன் ஞேட-மிகக்
ககனவர்மலர் மாரி சொரியத்-தேவ
கானக்கின்னரர் பாடக்
கோத்தவயிற்றில் வைத்திடு சகலவண்டமுங்
குலுங்கநான்மறை தேடச்-செழும்
கொத்துமலர்மாலை சரிந்திட-அந்தர
துந்துபியொலி வெகுவாய்நீட
மாதவர்களித்தாட வேகமொடுசென்று
மரகதமலைபோலெதிர் நின்று
நீ திகைத்தஞ்சாதேயஞ்சாதே யென்று
நெடியமுதலைபைக்கொன் றிடர்தொலைத்தன்று(மூல)

கஜேந்திரமோட்சக் கீர்த்தனை-முற்றிற்று.